நகல்:–

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – கல்வி – 2013– 2014 புதிய அறிவிப்புகள் – 10–ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் முதல் மற்றும் இரண்டாம் இடம் பெறும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர்/மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணவர் மற்றும் மாணவிகளுக்கு வழங்கப்படும் அறிவுக்கூர்மை பரிசுத் தொகையினை உயர்த்துதல் – ஆணை வெளியிடப்படுகின்றது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3) துறை

அரசாணை (நிலை) எண் : 89 நாள் :22.10.2013

விஜய ஐப்பசி 5, திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்கப்பட்டது.

இயக்குநர் ஆதிதிராவிடர் நலம் அவர்களின் கடித நக எண்.உ2/12303/2013 நாள் 15.05.2013.

–––––

ஆணை :–

2013–2014ஆம் ஆண்டு புதிய அறிவிப்புகளில் மாண்புமிகு அமைச்சர் (ஆதி(ம)பந) அவர்கள் பின்வரும் புதிய அறிவிப்பினை அறிவித்திருந்தார்.

“ஆதிதிராவிடர் / பழங்குடியினர் /கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகிய பிரிவினர்களில் ஒவ்வொரு பிரிவிலும் 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் முதல் இரண்டு மாணவர் மற்றும் இரண்டு மாணவியர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் மேற்படிப்பினைத் தொடரும்பட்சத்தில், அவர்களுக்கு முதல் ஆண்டுக்கு ரூ.800/–ம் அடுத்து வரும் 5 ஆண்டுகளுக்கு, ஓராண்டிற்கு ரூ.960/– வீதமும் பரிசுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகையினை முதலாம் ஆண்டிற்கு ரூ.1600/– ஆகவும், அடுத்து வரும் ஐந்தாண்டுகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.2000/– வீதமும் 2013–2014ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தி வழங்கப்படும்.

2. ஆதிதிராவிடர் நல இயக்குநர் தமது 15.5.2013 நாளிட்ட கடிதத்தில் புதிய அறிவிப்புகளில் வரிசை எண்.1ல் 2013–14ம் ஆண்டிலிருந்து ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகிய 3 பிரிவுகளிலும், 10ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் முதல் மற்றும் இரண்டாம் இடம்பெறும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ மாணவிகளுக்கு வழங்கப்படும் அறிவுக்கூர்மை பரிசுத் தொகையினை முதலாமாண்டிற்கு ரூ.800/–லிருந்து ரூ.1600/– ஆகவும் அடுத்து வரும் 5 ஆண்டுகளுக்கு ரூ.960/– லிருந்து ரூ.2000/– ஆகவும் உயர்த்தி வழங்க அறிவிக்கப்பட்டதற்கு ஏற்ப, ஆணை வெளியிடுமாறும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துருவை அரசு பரிசீலனை செய்து, 2013-14ஆம் ஆண்டின் புதிய அறிவிப்பின்படி ஆதிதிராவிடர் /பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ/மாணவியர்களுக்கு வழங்கப்படும் அறிவுக்கூர்மை பரிசுத் தொகையினை முதலாமாண்டிற்கு ரூ.800/-லிருந்து ரூ.1600/- ஆகவும், அடுத்து வரும் ஐந்தாண்டுகளுக்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ.960/-லிருந்து ரூ.2.000/- ஆகவும் உயர்த்தி அரசு ஆணையிடுகிறது. அறிவுக்கூர்மை பரிசுத் தொகையினை உயர்த்தப்பட்டதனால் தேவைப்படும் கூடுதல் தொகை ரூ.23,04,000/-ஐ (ரூபாய் இருபத்து மூன்று இலட்சத்து நான்காயிரம் மட்டும்) 2014-15ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்வதற்கு தேவையான முன்மொழிவினை உரிய நேரத்தில் அரசிற்கு அனுப்புமாறு அதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. மேலே பத்தி 3-ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தினை கீழ்க்காணும் இரு கணக்குத் தலைப்புகளில் பிரித்து பற்று வைக்கப்படும் .

<u>ஆதிதிராவிடர், மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிட மாணவ/மாணவியருக்கு:-</u>
"2225 ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் -01 ஆதிதிராவிடர் நலன் -277 கல்வி-I - திட்டத்தில் சேராதது AB கல்வி சலுகைகள் - 12 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் -09 - ஏனையவை".
ததொகுஎண்.(2225 -01-277- AB-1293)

<u>பழங்குடியின மாணவ /மாணவியருக்கு:-</u>
"2225 ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் -02 பழங்குடியினர் நலன் -277 கல்வி-I திட்டத்தில் சேராதது AA பள்ளிகள் - 12 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் -09 -ஏனையவை".
ததொகுஎண்.(2225 -02-277- AA-1294)

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு எண்.59187/ஆதி(ம)பந/2013 நாள் 22.10.2013 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்,
பள்ளிக் கல்வித்துறை, சென்னை-9.
உயர்கல்வித்துறை, சென்னை-9.
மாநில கணக்காயர், சென்னை-6/18/35
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5.

<u>நகல்</u>:–
நிதி(ஆதி(ம)பந)/வ.செ.பொது–II)த்துறை, சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு ஆதிதிராவிடர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளரின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அனைத்துப் பிரிவுகள், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.